(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 283]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2013 யூன் 19, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2487/ '12

1.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வத்தளை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள முத்துராஜவெல ஈர நிலத்திற்குரிய காணித்துண்டொன்றை, விற்பதற்கு, குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இக்காணியின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) முத்துராஜவெல ஈர நிலத்திற்குரிய காணிகள் தொடர்பாக இவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நிறுவனங்களிலிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இவ்வனுமதியை வழங்கிய உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(v) குறிப்பிட்ட அனுமதி பெறுதல் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே (அ)(i) இன் பிரகாரம் காணி வழங்கல் நடைபெற்றிருப்பின் இக்காணிகளைப் பெற்றவர்களின் முழுப்பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) முத்துராஜவெல ஈர நிலத்துக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக மேற் குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுத்தலானது தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தை மீறுவதாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2519/ '12

2.

கௌரவ புத்திக பதிரண,— தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கலேவத்த எனுமிடத்தில் பேணிவரப்படுகின்ற தேசிய மொழிகள் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மேற்படி நிறுவனத்தில் நிதி மோசடியில் ஈடுபட்டமை சம்பந்தமாக சனாதிபதி புலனாய்வுப் பிரிவினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி விசாரணைகளின் போது இவர் நிதி மோசடியில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்பது சனாதிபதி செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) நிதி மோசடி சம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை தொடர்ந்தும் அதே நிறுவனத்தில் சேவையில் ஈடுபடுத்துதல் ஒட்டு மொத்தமான அரச சேவையும் சீரழிவுக்கு உள்ளாக்குவதற்கு காரணமாக அமையும் என்பதை அவர் கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், இவரை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச் சபையில் அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2565/ '12

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) சுற்றுலா நகரமான அளுத்கம நகரில் விரிவாக்கப்பட்ட வீதி முறைமைக்கு ஏற்றவாறு முறைசார்ந்த விதத்தில் அமைக்கப்படாதுள்ள வடிகால் தொகுதியில் கழிவுகள் தேங்கி இடையூறாக இருப்பதே நகரில் துர்நாற்றம் வீசுவதற்கு காரணமாக அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நிலைமையை சீராக்குவதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) அளுத்கம நகரில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பேரூந்து தரிப்பிடத்தின் கடைகள் இதுவரை வர்த்தகர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2797/ '12

4\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையிலான காலப் பகுதியில் புதையல்கள் தோண்டப்பட்டதாக அறியவந்துள்ள இடங்களின் எண்ணிக்கை வருட ரீதியில் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி இடங்களில் தொல்பொருளியல் பெறுமதி கொண்ட இடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) புதையல் தோண்டல் சம்பந்தமாக இதுவரை கைது செய்யப்பட்டுள்ள தொல்பொருளியல் பெறுமதியுடன்கூடிய பொருட்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி தொல்பொருட்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் புதையல் தோண்டுவதற்காக அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள, ஆயினும் அது சம்பந்தமாக ஒருவரும் கைதுசெய்யப்படாதுள்ள தொல்பொருளியல் சார்ந்த இடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த இடங்கள் யாவையென்பதையும்;

(iii) பெறுமதிமிக்க தொல்பொருட்கள் புதைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்ற தொல்பொருளியல் சார்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்காக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) இது தொடர்பாக எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2818/ '12

5\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சூரியவெவ கிரிக்கெட் மைதானம் தொடர்பாக,

(i) மாதாந்த மற்றும் வருடாந்த பேணல் செலவு, வட்டிச் செலவு ஆகியன எவ்வளவு என்பதையும்;

(ii) கடன் பெறு மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்;

(iii) மாதாந்தம் எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சூரியவெவ கிரிக்கெட் மைதான கருத்திட்டக் கடனை மீளச் செலுத்துதல் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(ii) இக்காலப்பகுதிக்கான பணப் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்காக கடன் கொடுத்தவர்கள் அனைவருக்கும் கடன் மீளச் செலுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3044/ '12

6.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தின் மத்துமக, அகலவத்த மற்றும் புலத்சிங்கல பிரதேசங்களில் தனியார் மயப்படுத்தப்பட்ட அரச தோட்டங்களில் தொழிலாளர்களின் துப்புரவு ஏற்பட்டுப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை இத் தோட்டக் கம்பனிகளினால் குறைக்கப்பட்டுள்ளதால் இத்தொழிலாளர்கள் கடும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இத்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுகாதார வசதிகள் யாவை என்பதையும்;

(iii) இத்தோட்டத் தொழிலாளர் சமுதாயத்தில் தற்போது காணப்படும், தாய், சேய் மரணங்கள், தொற்றாத நோய்கள் பீடித்தல், முறையற்ற கர்ப்பமுறல், மற்றும் குறையூட்டம் தொடர்பான புள்ளிவிபரத் தரவுகள் யாவை என்பதையும்

(iv) இப் பிரதேசங்களுக்குத் தேவையான துப்பரவேற்பாட்டு மற்றும் சுகாதார வசதிகளை துரிதமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2570/ '12

7.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முதலாவது பாராளுமன்றத்திலிருந்து ஏழாவது பாராளுமன்றம் வரையிலான ஒவ்வொரு பாராளுமன்றத்தினதும் பெண்கள் பிரதிநிதித்துவம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பெண்கள் பிரதிநிதித்துவமும், சம்பந்தப்பட்ட பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினரர்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதமென்பதை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தில் நியாயமான பிரிதிநிதித்துவம் கிடைக்கின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2700/ '12

8.

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றவர்களுக்கு அவர்கள் ஈட்டுகின்ற வருமானத்தில் இருந்து அமெரிக்க டொலர் 20,000 பணத்தொகையை இலங்கையின் வங்கியொன்றில் வைப்புச் செய்த பின்னர் தீர்வை வரிச் சலுகையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி வசதிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிட்டுள்ளவாறு தீர்வை வரிச் சலுகையின் கீழ் வாகனமொன்றை இறக்குமதி செய்ய நிலவிய வசதிகளை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்போது என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2801/ '12

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் தலையீட்டுடன் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் பேணிவரப்படும் பழங்கள் ஏற்றுமதிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) அதற்கான நிதி பெறப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(iv) அதன் கீழ் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் இதுவரை ஒவ்வொரு பழ வகையின் வருடாந்த உற்பத்தி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி நாடுகளுக்கு வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் பழ வகைகள் மற்றும் அவற்றின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(viii) தற்போது இந்தக் கருத்திட்டம் அடைந்துள்ள முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2859/ '12

10\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட, செலஸ்ரியல் டவர்ஸ் (செலிங்கோ முதலீட்டு கம்பனிக் குழுமம்) தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீள்நிர்மாணம் யாதென்பதையும்;

(ii) சொல்லப்பட்ட ஆதனம் விஸ்தரிப்பு மற்றும் மேம்பாட்டுக்காக எவரேனும் முதலீட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், முதலீட்டாளரின் பெயர்களையும், சம்பந்தப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) புதிய முதலீட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள மேற்கூறிய ஆதனத்துக்கான மொத்த முதலீட்டையும்;

(ii) அதே ஆதனத்தை மேம்படுத்த, பிற முதலீட்டாளர்களினால் ரூபா 6.8 பில்லியன் மற்றும் ரூபா 8.5 பில்லியனிற்கான பிரேரணைகளைப் பற்றி அதிகாரிகள் அறிவார்களா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இன்றுள்ளவாறு இந்த ஆதனத்துக்குப் பொறுப்பான தகுதிவாய்ந்த அதிகாரிகளையும்;

(ii) அரசாங்கத்தினால் இத்தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு செலுத்தப்படும் மாதாந்த ஊதியத்தையும்;

(iii) மேற்கூறிய தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்குச் செலுத்தப்படும் மொத்த ஊதியத்தையும் படிகளையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

3051/ '12

11\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நாடு முழுவதிலுமான ஆஸ்பத்திரிகளில் மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்களுக்கு கடும் பற்றாக்குறை காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில், மேற்படி பதவிக்காக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான குறித்த நியமன இடங்கள் திணைக்கள அதிகாரிகளால் திருத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களாக நியமனம் பெற்றவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் மேற்படி உத்தியோகத்தர்களின் நியமன இடங்களைத் திருத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) நியமன இடங்களுக்கான திருத்தங்களை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2571/ '12

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முதலாவது பாராளுமன்றத்திலிருந்து ஏழாவது பாராளுமன்றம் வரை ஒவ்வொரு பாராளுமன்றத்திலுமிருந்த அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை, மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்திற்கேற்ப பெண்களுக்கு நியாயமானதொரு பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் கிடைத்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2701/ '12

13.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, அக்குரஸ்ஸ, திப்பொடுவாவ, "சொமிகெலுமில்" வசிக்கும் திரு. பி.ஜீ.பீ. அசோக 2011.03.14 ஆம் திகதி இரவு நடன நிகழ்ச்சியொன்றைப் பார்ப்பதற்காக திப்பொடுவாவ கடைவீதிக்கு சென்றிருந்த வேளை மரணமடைந்துள்ளாரென்பதையும்;

(ii) மறுநாள் பலகாவல மதகொன்றின் கீழ் இருந்து இவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ள போதிலும் இம்மரணம் தொடர்பான முறையான விசாரணையை அக்குரஸ்ஸ பொலீசார் மேற்கொள்ளவில்லை என இறந்தவரின் மனைவி குற்றம் சாட்டுகின்றார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு.அசோகவின் மரணம் தொடர்பாக முறையான விசாரணையை நடாத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இவ்விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2869/ '12

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கெத்தே பசிபிக் நிறுவனத்திடமிருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வானூர்திகள் தொடர்பாக அவற்றின்,

(i) எண்ணிக்கையையும்;

(ii) அவை எவ்வளவு பழைமையானவை என்பதையும்;

(iii) குத்தகைக் காலம் மற்றும் செலுத்தப்பட்ட விலையையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) (i) மேற்சொன்ன கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் தலைவர் சம்பந்தப்பட்டிருந்தாரா என்பதையும்;

(ii) இந்த பல மில்லியன் ரூபா சம்பந்தப்பட்ட இக் கொடுக்கல் வாங்கல் பத்திரிகைகளில் அல்லது இணையத்தளங்களில் விளம்பரப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) போட்டி விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றனவா என்பதையும்

(iv) இக்கொடுக்கல் வாங்கல் கெத்தே பசிபிக் நிறுவனத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) உயர் குத்தகைக் கட்டணத்தினால் ஏற்பட்ட பாரிய நட்டத்தின் காரணமாக கெத்தே பசிபிக் நிறுவனத்துடனான குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கையையும் ;

(ii) மேற்படி குத்தகையில் உள்நாட்டு முகவர் மற்றும் கெத்தே பசிபிக் நிறுவனத்துக்கான உள்நாட்டு முகவரின் பெயர்களை வெவ்வேறாகவும்;

(iii) மேற்சொன்ன குத்தகை முகவர் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் பணிப்பாளர் ஒருவரின் புதல்வரா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

3052/ '12

15.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறு நாடுகளிலிருந்து இந்நாட்டுக்குத் தேவையான சுமார் 7500 மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் இம்மருந்துகளிலிருந்து 800% வரை இலாபம் பெறுகின்றார்கள் என்பதையும்;

(iii) இதன் காரணமாக நோயாளர்கள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாடுகளிலிருந்து இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகள் யாவை;

(ii) மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலையொன்றை விதிப்பதற்குத் தயாரிக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பாரா;

(iii) மருந்துப் பொருள் வர்த்தகம் மூலம் அநீதியான விதத்தில் இலாபம் ஈட்டும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ ஜோன் அமரதுங்க,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ அவர்களால் 2012, யூலை மாதம் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

15.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

17.

இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.